**OS 4230/2020** **DATE: 04.02.2025**

**PW1- கைலாஷ்**

**3 மற்றும் 4 ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

வாசா 2 ஆவணம் பதிவு செய்யப்பட்ட பின் 3 வருடம் கழித்து தான் இந்த வழக்கை தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். அதனால் இந்த தாவா கால தோஷத்தால் பாதிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வாசா 1 ஆவணம் CS NO. 1055/2008 தாக்கல் செய்வதற்கு முன்பே ஏற்படுத்தப்பட்ட ஆவணம் என்பதால் அது 3-4 பிரதிவாதிகளை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. நான் தாவாவில் உரிமைவிளம்புகை பரிகாரம் கேட்காமல் சுவாதீனம் பரிகாரம் மட்டும் கேட்டுள்ளதால் தாவா நிலைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல.3 மற்றும் 4 பிரதிவாதிகள் 1 மற்றும் 2 பிரதிவாதிகளிடம் சரியான கிரையத்தொகை கொடுத்துதான் கிரையம் பெற்றுள்ளார்கள் என்றால் சரியல்ல. 3 மற்றும் 4 பிரதிவாதிகளுக்கு CS NO. 1055/2008 பற்றிய விவரம் தெரியும் என்பதற்கு நான் ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்று எனக்கு தெரியாது. ஆனால் அவர்களுக்கு இதுசம்மந்தமான அறிவிப்பு கொடுத்துள்ளேன். எந்த தேதி மாதம் கொடுத்தேன் என்று எனக்கு ஞாபகமில்லை. நான் உயர்நீதிமன்றத்தில் 1ம் பிரதிவாதி தாவா சொத்தை விற்கவோ வில்லங்கம் ஏற்படுத்தவோ உறுத்துக்கட்டளை பரிகாரம் போட்டுள்ளேன் ஆனால் எனக்கு உறுத்துக்கட்டளை வழங்கப்பட்டதா என்று ஞாபகமில்லை. அதை இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்று எனக்கு ஞாபகமில்லை.

Typed to my dictation in my presence and hearing and under my personal dictation and superintendence and interpreted to the Witness and admitted and signed by the witness to be correct.

Dt. 04.02.2025 II Addl. District Judge.